கல்வி

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பது முதுமொழி. கல்வி ஒரு மனிதனுக்குக் கண்கள் போன்றது. ஒருவருடைய வாழ்க்கைக்கு வழி காட்டும் கல்வியைப் பயில உகந்த இடம் _____.

கல்வி கற்பதனால் ஒருவருக்குப் பல நன்மைகள் ஏற்படும். _____ போன்று வெளியுலக அறிவு இல்லாமல் இருப்பதைத் தவிர்க்க உதவுவது கல்வி. அறிவுத் தெளிவையும் ஞானத்தையும் கொடுப்பது கல்வி. அறிவியல் உலகத்தோடு போட்டிப் போட்டு வாழ உதவியாக இருப்பது கல்வி. கல்வி கற்றவரை உலகம் போற்றும். மேலும் உயர்ந்த வருமானத்தையும் நன்மதிப்பையும் பெற கற்ற கல்வி துணை புரிகின்றது. பிறரால் _____ தன்னம்பிக்கையுடன் வாழ கல்வி உதவுகின்றது.

கல்வி கற்காதவர் _____ இல்லாதவர்களாகவும் துன்பத்தில் உழன்றும் வாழ்க்கை நடத்துவர். கல்வி கற்க _____ கிடையாது. எந்த வயதிலும் கல்வியைக் கற்கலாம்.

கல்வியை அனைவரும் கற்று வாழ்க்கையை _____ மிதக்கச் செய்ய வேண்டும். கல்லாதவர்களை யாரும் விரும்ப மாட்டார்கள்; தூற்றிப் பேசுவர்; புறக்கணிக்கப்படுவர் என்பதை உணர வேண்டும்.

எனவே, கல்வியை வாய்ப்பு உள்ள போதே கற்று _____ விலக வேண்டும். கல்வி அறியாமையை நீக்கும் மருந்து என்பதை அறிந்து தினமும் விடாமுயற்சியுடன் கல்வி கற்போம்.

பள்ளிக்கூடம்	உலக துன்பங்களிலிருந்து	அறிவுத் தெளிவு
கிணற்றுத்தவளை	ஏமாற்றப்படாமல்	வயது வரம்பு
இன்பக் கடலில்		

LIVEWORKSHEETS